வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.4/20

வழக்கு சாட்சி - அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பவுனப்பன் | தொழில் | பத்திரிக்கையாளர் |
| கிராமம் | வடபுதுப்பட்டி | சமயம் | |
| தாலுக்கா | பெரியகுளம் | வயது | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2024

**(** எதிரிகள் வழக்கில் ஆஜராவதிலிருந்து விலக்குஅளிக்கப்பட்டள்ளது**. )**

அரசு தரப்பில் முதல் விசாரணை

அசா1 ஐ தெரியும். 1ம் எதிரிஜெகதீஸ், 2ம் எதிரி வனஜா தெரியும். 2ம் எதிரி வனஜா 1ம் எதிரியின் அம்மா. 3 மற்றும் 4 எதிரிகள் எனக்கு அறிமுகம் இல்லை. 1ம் எதிரி ஜெகதீசன் அசா1 சுப்புராமை கடன் வாங்கி கொடுப்பதாக கூறி ஏமாற்றி பவர் பத்திரம் எழுதிக்கொடுக்க ஜெகதீசனின் அம்மா பெயரில் பத்திரம் போட்டு ஏமாற்றியது பத்திர அலுவலகத்திற்கு அருகில் உள்ள எனது நண்பர் ராஜேஷ் என்பவர் வழக்கறிஞராக அலுவலகம் வைத்துள்ளார், ஏற்கனவே 1ம் எதிரி ஜெகதீசன் மோசடி செய்து தனது அம்மா பெயரில் பத்திரம் எழுதிக்கொடுத்து அது சம்மந்தாக பத்திரம் தொலைந்துவிட்டதாக பத்திரிக்கையில் விளம்பரம் கொடுத்ததாக எனது நண்பர் ராஜேஷ் என்னிடம் கூறினார். அதன்பின்னர் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அதன்பின்னர் சுப்புராம் 1ம் எதிரி ஜெகதீசன் தன்னை ஏமாற்றிவிட்டதாகவும், பவர் பத்திரத்தை தவறாக பயன்படுத்தியதாகவும் கூறினார். மேலும் பவர் பத்திரத்தை இரத்து செய்யும்படி அவரிடம் நான் கூறினேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன பத்திரிக்கையில் என்னவாக இருககிறேன் என்றால் தேனி ரிப்போர்ட்டார் சென்னை லைன், போர்வை ரிப்போர்ட்டர் ஆகியவற்றை நான் நடத்தி வருகிறேன். இதற்கு உரிமம் வைத்துள்ளேன். நான் 10 வருடமாக நடத்தி வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிஸார் விசாரணையில் நான் பத்திரி பதிவாளராக இருந்துவருவதாக கூறியுள்ளேன் என்றால் அது தவறு. முத்துகிருஷ்ணன் மகன் சுப்புராம் என்பவர் கடந்த சில வருடங்களாக பழக்கம் உண்டு என்று போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் அது தவறு. 1,2 எதிரிகள் அசா1டம் மோசடியாக பவர் ஆவணம் பெற்றுவிட்டதாகவும், அதை இரத்துசெய்வதற்காக என்னிடம் உதவி கேட்டதாகவும் போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால்

அது தவறு. மேற்படி பவர் பத்திரத்தை இரத்து செய்வதற்கு ஆவணம் தயார் செய்து கொடுத்ததாக போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் அது தவறு. 11.9.18 தேதியில் பவர் ஆவணம் மோசடியானது என்று பதிவு செய்யமுடியாது என்றும், அதை இரத்து செய்ய மட்டுமே முடியும் என்பதால் இரத்து ஆவணம் தயார் செய்து கொடுத்ததாக போலிச்விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் அது தவறு. நான் அவ்வாறு கூறவில்லை. அசா1க்கும் 1ம் எதிரிக்கும் என்ன பண வரவு செலவு என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1ம் எதிரி அசா1 க்கு கடன் வாங்கி தருகிறேன் என்றும் எந்து வங்கியில் எவ்வளவு பணம் வாங்கி தருவதாக சொன்னார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் பத்திரிகையாளர் என்பதை பயன்படுத்தி 1ம் எதிரியிடம் பணம் பறிக்க முயற்சி செய்தேன்என்றும் அதற்கு அவர் ஒத்துழைக்காததால் நான் அவருக்குஎதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் ராஜேஷ் கொடுத்ததாக கூறப்படும் புகார் அசா1 மற்றும் 1ம் எதிரி மீது கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். புகார் கொடுத்த விபரம் ராஜேஷ் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான அசா1க்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் வழக்கு விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல.